தனியான விடைப் புத்தகத்தினை உபயோகிப்பதுடன் பாடத்தின் பெயரினை வியாபாரச் சட்டம் என எழுதுக.

முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்**

**இடைநிலைப் பரீட்சை – 2011 ஜுலை**

**வியாபாரச் சட்டம்**

Business Law

31-07-2011
காலை
[9.00 – 10.30]

(56) வியாபாரச் சட்டமும் முகாமையியலும் பாடத்தின் பகுதி

பக்கங்களின் எண்ணிக்கை: 02
வினாக்களின் எண்ணிக்கை: 06

**நேரம்: 01 மணித்தியாலம் 30 நிமிடங்கள்**

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்:**

*(1) இது வியாபாரச் சட்டமும் முகாமையியலும் பாடத்தின் "**வியாபாரச் சட்டம்**" பகுதியாகும்.*

*(2) ஏதேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடை எழுதுக.*

*(3) விடைகள் யாவும் உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த ஒரே மொழியிலேயே எழுதப்படல் வேண்டும்.*

*(4) வியாபாரச் சட்டமும் முகாமையியலும் பாடத்தில் பரீட்சார்த்தி ஒருவர் சித்தியடைவதற்கு வியாபாரச் சட்டம் மற்றும் முகாமையியல் ஆகிய ஒவ்வொரு பகுதியிலும் நிலைக்கு ஏற்ப குறைந்த பட்சம் 40% அல்லது 50% புள்ளிகளைப் பெறல் வேண்டும்.*

*(5) மொத்தம் 50 புள்ளிகள்*

---

**01.** (a) மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் (Court of Appeal) வழங்கப்படும் இரண்டு (02) வகையான எழுத்தாணைகளைக் (writs) குறிப்பிடுக.

(b) உரோமன் - டச்சுச் சட்டத்திற்கு உட்படாத இரண்டு (02) வகையான நபர்களைக் குறிப்பிடுக.

(c) இலங்கைக் குடியரசின் அரசியல் யாப்பின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் (Fundamental rights) இரண்டினைக் (02) குறிப்பிடுக.

(d) இரண்டு (02) வகையான கைமாற்றத்தகு சாதனங்களைக் (Negotiable instruments) குறிப்பிடுக.

(e) அரசாங்கத்தின் பிரதம சட்ட அதிகாரியினதும் (Chief Legal officer) நீதித்துறையின் (Judiciary) பிரதம நீதித் துறை உத்தியோகத்தரினதும் உத்தியோகபூர்வ பதவிப் (official Designation) பெயர்களைக் குறிப்பிடுக.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 10 புள்ளிகள்)

02. (a) ஒப்பந்தச் சட்டத்தின்படி "கொடை" முனைவு (offer) என்னும் பதத்தினை பொருள் வரையறை செய்க (03 புள்ளிகள்)

(b) பின்வரும் ஒப்பந்தம் சட்டபூர்வமானதா? உமது விடைக்குக் காரணங்கள் தருக.

"களவாகக் கடத்தல் பொருட்களை (smuggled goods) இலங்கைக்குள் கொண்டு செலவதற்கான ஒரு ஒப்பந்தம்." (03 புள்ளிகள்)

(c) கீழ்வருவன ஒவ்வொன்றினையும் சுருக்கமாக விபரிக்குக.

(i) குறிப்பிட்ட செயற்பாடு (Specific performance)

(ii) தவறாகப் பிரதிநிதித்துவப்படுத்தல் (Misrepresentation) (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

03. (a) பொருட்கள் விற்பனை கட்டளைச் சட்டத்தின் கீழ் (sale of goods ordinance) Nemo dat quod Non Habet சட்டவிதியினை விளக்கி இவ்விதிக்கு விதிவிலக்குகள் (exemption) இரண்டினைக் (02) குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(b) விற்பனையாளர் "செல்வழியில் இடைநிறுத்துதல்" (stoppage in transitu) உரிமையைப் பிரயோகிப்பதற்கு, திருப்திப்படுத்த வேண்டிய நிபந்தனைகள் (Conditions) யாவை? (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

04. "காசோலையென்பது ஒரு வங்கியாளனிடம் கோரிக்கை மீது கொடுப்பனவு செய்யுமாறு வரையப்பட்ட (Payable on demand) ஒரு மாற்றுண்டியல் ஆகும். இருப்பினும் காசோலை ஒன்றிற்கும் மாற்றுண்டியல் ஒன்றிற்கும் இடையே வித்தியாசங்கள் உள்ளன."

காசோலை ஒன்றிற்கும் மாற்றுண்டியல் ஒன்றிற்கும் இடையேயான நான்கு (04) வேறுபாடுகளை விபரிக்குக. (10 புள்ளிகள்)

05. முகவராண்மை ஆக்கத்திற்கான (creation of Agency) முறைகளை (Methods) சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

06. பின்வரும் ஒவ்வொன்றைப் பற்றியும் சுருக்கமாக விளக்குக.

(a) தொழிற்சங்கம் (Trade Union)

(b) வேலை நிறுத்தம் (Strike)

(c) கூட்டு ஒப்பந்தம் (Collective agreement)

(d) கதவடைப்பு (Lock out) (02½ x 4 = 10 புள்ளிகள்)

- o0o -